பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
30 01 2025 **THURSDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தேசப்பிதா மகாத்மா காந்தியின் 77-வது நினைவு தினத்தையொட்டி அன்னாரது நினைவிடத்தில் குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

2. இந்நாளையொட்டி சென்னையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

3. நாடாளுமன்ற கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து புதுதில்லியில் தற்போது அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

4. பாலாற்றில் தோல் தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதை தடுக்க தமிழக அரசு குழு அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5. தோஹாவில் நடைபெற்ற இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Sayali Wani -** துனிஷியாவின் **Wassim Essid** இணை பட்டம் வென்றது.

>>>>>>><<<<<<<

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 77-வது நினைவு தினத்தை ஒட்டி, குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

தில்லி ராஜ்காட்டில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், மகாத்மா காந்தியின் கொள்கைகள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க உத்வேகம் அளிப்பதாக கூறியுள்ளார்.

நாட்டிற்காக உயிர்நீத்த அனைவரின் தியாகம் மற்றும் சேவைகளை இந்நாளில் நினைவுகூருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், மகாத்மாவின் கொள்கைகளான உண்மை, அகிம்சை, தன்னலமற்ற சேவை உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு வழிகாட்டுவதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலும் மகாத்மா காந்தியின் நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள காந்தியின் சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப்படத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

காந்தியடிகளின் நினைவு தினம் தியாகிகள் தினமாகவும், தேசிய தொழுநோய் ஒழிப்பு தினமாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தொழுநோய் ஒழிப்புத் திட்ட துணை இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரி தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - புவனேஸ்வரி 38 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

வக்ஃப் வாரிய சட்டத்திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு தனது அறிக்கையை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவிடம் இன்று சமர்ப்பித்தது.

கூட்டுக்குழுத் தலைவரான பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜெகதாம்பிகா பால் அறிக்கையை சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து, வக்ஃப் வாரிய மசோதா வரும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என தெரிகிறது.

>>>>>>><<<<<<<

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து மத்திய அரசு அனைத்துக்கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறது.

புதுதில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்று வரும் இக்கூட்டத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு மற்றும் அனைத்துக் கட்சி தலைவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

பட்ஜெட் கூட்டத்தொடர் குடியரசுத் தலைவர் உரையுடன் நாளை தொடங்குகிறது.

நாளை மறுநாள் மத்திய அரசின் 2025-26ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை, நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்யவுள்ளார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில், பாலாற்றில் தோல் தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதை தடுப்பது குறித்து கண்காணிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்றை அமைக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி திரு. ஜெபி. பர்திவாலா மற்றும் திரு. ஆர். மகாதேவன் அடங்கிய அமர்வு, இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

இவ்விவகாரத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவது தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துமாறும் உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கு விசாரணையை நான்கு மாதங்களுக்கு ஒத்தி வைத்தனர்.

>>>>>>><<<<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகாகும்பமேளாவில் இன்று 55 லட்சத்திற்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

கடந்த 13ஆம் தேதி கும்பமேளா தொடங்கியதிலிருந்து 27 கோடிக்கும் அதிகமானோர் புனித நீராடியுள்ளதாக உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**>>>>>>><<<<<<<**

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஆறு பேர் விமானம் மூலம் இன்று காலை சென்னை வந்தடைந்தனர்.

பின்னர், அவர்கள் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, கடந்த 11ஆம் தேதி இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, அந்நாட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக இவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, தமிழகம் வந்து சேர்ந்தனர்.

**>>>>>>><<<<<<<**

குஜராத்தின் கட்ச் மாவட்டத்திற்கு உட்பட்ட **Guneri** கிராமம் அம்மாநிலத்தின் முதலாவது உயிர் பன்மை பாரம்பரிய தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கிராமத்தில் உள்ள 32 ஹெக்டேர் சமவெளிப் பரப்பில் மாங்ரோவ் காடுகள் வளர்க்கப்படுவது தனித்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இயற்கை பாதுகாப்பு மற்றும் சுற்றுலாவுக்கு பிரசித்தி பெற்ற கட்ச் மாவட்டத்தின் சிறப்பை மேம்படுத்தும் வகையில் அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் வழிகாட்டுதலின் பேரில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>>><<<<<<<**

இலங்கையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் நடத்தப்படும் என அந்நாட்டு அமைச்சர் திரு. **Nalinda Jayatissa** தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான தேர்தல் அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி, சமாஹி ஜன பலவேகயா உள்ளிட்ட கட்சிகள் ஒரே அணியாக போட்டியிட முடிவு செய்துள்ளன.

அந்நாட்டில் உள்ள 340 உள்ளாட்சி அமைப்புகளுக்கு 8 ஆயிரத்து 700 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

**>>>>>>><<<<<<<**

அமெரிக்காவில் 64 பேருடன் சென்ற விமானம் ஒன்று நடுவானில், ராணுவ ஹெலிகாப்டருடன் மோதி விபத்துக்குள்ளானதில் அவற்றில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

**Kansas** மாகாணத்தில் உள்ள **Wichita**–விலிருந்து புறப்பட்ட இந்த விமானம், வாஷிங்டனில் உள்ள ரொனால்டு ரீகன் விமான நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை, 18 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த விபத்து துரதிருஷ்டவசமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>>><<<<<<<**

யமுனை ஆற்றில் அமோனியா நச்சின் அளவு அதிகரிப்பதை, விஷம் கலக்கப்பட்டதாக கூறப்படும் புகாருடன் இணைக்கக் கூடாது என்று ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பான கெஜ்ரிவாலின் குற்றச்சாட்டு குறித்து, பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் அளித்த புகாரை பரிசீலித்த தேர்தல் ஆணையம், அவரது குற்றச்சாட்டு, மக்களிடையே நிலவும் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் இருப்பதால் நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும் என தெரிவித்துள்ளது.

**>>>>>>><<<<<<<**

தோஹாவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Sayali Wani -** துனிஷியாவின் **Wassim Essid** இணை பட்டம் வென்றது.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்த இணை 11-8, 8-11, 11-8, 7-11, 13-11 என்ற செட்கணக்கில் பிலிப்பைன்ஸின் **Kheith Cruz –** தென்கொரியாவின் **Choi Jiwook** இணையை வென்றது.

**>>>>>>><<<<<<<**